வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No.: P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu




Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 06.01.2026 செவ்வாய்க்கிழமை இதழ் : 06 பக்கங்கள் : 08

## மாகாண சபைகள் தேர்தல்:
# பாராளுமன்ற விசேட குழுவை நியமிக்கும் பிரேரணை இன்று

கொழும்பு, ஜனவரி 06

**மாகாண சபைகள் தேர்தல் எந்தத் தேர்தல் முறைமையின் கீழ் நடத்தப்பட வேண்டும் என்பதை ஆராய்ந்து அறிக்கையிடவும் அது தொடர்பான முன்மொழிவுகள் - விதப்புரைகளை சமர்ப்பிக்கவும் பாராளுமன்ற விசேட குழு ஒன்றை நியமிப்பதற்கான பிரேரணையை பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் சந்தன அபேரத்ன இன்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் முன்வைக்கவுள்ளார்.**

கொழும்பு, ஜனவரி 06

மாகாண சபைகள் தேர்தல் எந்தத் தேர்தல் முறைமையின் கீழ் நடத்தப்பட வேண்டும் என்பதை ஆராய்ந்து அறிக்கையிடவும் அது தொடர்பான முன்மொழிவுகள் - விதப்புரைகளை சமர்ப்பிக்கவும் பாராளுமன்ற விசேட குழு ஒன்றை நியமிப்பதற்கான பிரேரணையை பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் சந்தன அபேரத்ன இன்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத் தில் முன்வைக்கவுள்ளார்.

2026ஆம் ஆண்டுக்கான முதலாவது பாராளுமன்ற அமர்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் நடைபெறவுள்ளது. இதன்போதே அவர் இந்தப் பிரேரணையை முன்வைப்பார்.

இந்த நிலையில், மாகாண சபைகள் தேர்தல்கள் பற்றி அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவிக்கையில்,

07

# ஜோன்ஸ்டனுக்கும் மகனுக்கும் வரும் 9ஆம் திகதி வரை மறியல்

கொழும்பு, ஜன. 06

சதொச நிறுவனத்தின் வாகனங்களை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் நேற்று கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவையும் அவரின் இளைய மகனையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சராக பதவி வகித்தபோது சதொசவின் வாகனங்களை தவறாகப் பயன்படுத்தியமை தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்காக நிதி குற்றப் புலனாய்வு பிரிவில் நேற்றைய தினம் முன்னிலையாகுமாறு உத்தரவிடப்பட்டது.

இதன்படி, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவும்

07



# றிஷாத் பதியுதீன் எம். பி. இலஞ்ச விசாரணை குழுவில்!

கொழும்பு, ஜன. 06



பாராளுமன்ற உறுப்பினர் றிஷாத் பதியுதீன் இலஞ் சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் நேற்று திங்கட்கிழமை முற்பட்டார்.

முன்னர் அவர் அமைச்சராக பதவி வகித்த காலத்தில், கமத்தொழில் அமைச்சு பணிமனையை நடத்துவதற்காக ராஜகிரிய பிரதேசத்தில் உள்ள கட்டடம் ஒன்றை

07

# எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்தாலே நாட்டின் தலைவிதியை மாற்றலாம்

## நாமல் ராஜபக்ஷ சொல்கிறார்

கொழும்பு, ஜன. 06

"நாட்டின் தலைவிதியை மாற்றுவதற்கு எதிர்க்கட்சிகளின் கூட்டணி மட்டுமே ஒரே சாத்தியமான வழி", என்று சிறிலங்கா பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

"பிளவுகள் நாட்டை பலவீனப்படுத்து வதைவிட அரசியல் கட்சிகள் ஒன்றிணைய வேண்டும் என்று எனது தந்தை எப்போதும் நம்பினார். எனவே, ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி ஒன்றிணைவதற்கான

07



# ஹெரோயினுடன் இருவர் கைது!

பு. கஜிந்தன்

யாழ்ப்பாணம், ஜன. 06

ஹெரோயின் போதைப்பொருளுடன் கொழும்புத்துறையில் இளைஞர்கள் இருவர் நேற்று கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து 4 கிராம் 90 மில்லிகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டதாக

07

# தையிட்டி விகாரைக்கு எதிராக போராடியவர்களுக்கு பிணை!

## பெப். 26இற்கு வழக்கு ஒத்திவைப்பு

த. பிரதீபன்

யாழ்ப்பாணம், ஜன. 06

தையிட்டி விகாரைக்கு எதிராக போராடியவர்களை சொந்த பிணையில் செல்ல அனுமதித்த நீதிமன்றம் இது தொடர்பான வழக்கை எதிர்வரும் பெப்ரவரி 26ஆம் திகதிக்கு அழைக்க உத்தரவிட்டுள்ளது.

தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிராக போராடியபோது கைது செய்யப்பட்ட வேலன் சுவாமி, வலி. கிழக்கு பிரதேச சபை தவிசாளர்

07

# வட, கிழக்கில் நாளைமுதல் கனமழை; வெள்ளப்பெருக்கு ஏற்படவும் வாய்ப்பு!

**மத்திய மாகாணத்தில் மண்சரிவுகள் ஏற்படலாம்**
**மீனவர்கள் கடலுக்கு செல்வதைத் தவிர்க்கவும்**

## பிரதீபராஜா எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 06

நாட்டுக்கு தென்கிழக்கே தாழமுக்கம் வலுப்பெறுவதால் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு நாளை முதல் கனமழை கிடைக்கும். இதனால், பல பகுதிகளிலும் வெள்ளப்பெருக்கு ஏற்படும் அபாயம் காணப்படுகிறது. இதேபோன்று, மத்திய மாகாணத்தில் மண்சரிவுகள் நிகழவும் வாய்ப்புள்ளது என்று காலநிலை அவதானிப்பாளரும் யாழ். பல்கலைக்கழக புவியியல் துறை தலைவருமான பேராசிரியர் நா. பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

07

# நெடுந்தீவில் பாம்பு தீண்டிய பெண் ஹெலி மூலம் அழைத்துவரப்பட்டார்

பு. கஜிந்தன்

யாழ்ப்பாணம், ஜன. 06

நெடுந்தீவில் பாம்பு தீண்டியதால் பாதிக்கப்பட்ட பெண் ஹெலி மூலம் சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்ப்பிக்கப்பட்டார்.

நெடுந்தீவை சேர்ந்த 33 வயதுடைய பெண் நேற்றைய தினம் பாம்பு தீண்டியதால் சிகிச்சைக்காக நெடுந்தீவு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மேலதிக சிகிச்சைக்காக அவரை யாழ்ப்பாணம்

07

# சகல மாகாண சபைகளிலும் முறையற்ற நிதி பயன்பாடு

## கணக்காய்வு பணிமனை சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன. 06

திறைசேரியின் நிதி ஒதுக்கீடுகளை முழுமையாக நம்பி இயங்கும் மாகாண சபைகள் முறையற்ற மற்றும் சிக்கனமற்ற வகையில் நிதியைப் பயன்படுத்துகின்றன என்று தேசிய கணக்காய்வு பணிமனை தனது 2024ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

2024ஆம் ஆண்டுக்காக 9 மாகாண சபைகளுக்கும் அரசாங்கத்தால் 43 ஆயிரத்து 736. 5 கோடி

07

# எரிபொருள் விலையில் மாற்றம்

கொழும்பு, ஜன. 06

92 ஒக்ரேன் பெற்றோல் தவிர்ந்த ஏனைய எரிபொருட்களின் விலைகளை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அதிகரித்துள்ளது.

இந்த விலை திருத்தம் நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இதன்படி, 95 ஒக்ரேன் பெற்றோல் லீற்றருக்கு 5 ரூபாயால் அதிகரித்து 340 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று, ஒட்டோ டீசல் 2 ரூபாய் அதிகரித்து லீற்றர் 279 ரூபாயாகவும் சுப்பர் டீசல் 5 ரூபாய் அதிகரித்து 323 ரூபாயாகவும் மண்ணெண்ணெய் 2 ரூபாய் அதிகரித்து 182 ரூபாயாகவும் விற்பனை செய்யப்படும்.

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவருக்கு கற்றல் கையேடுகளுடன் வெண்கரம் குழு மலையகம் பயணம்!



யாழ்ப்பாணம், ஜன. 06

டித்வா புயலால் பாதிக்கப்பட்ட மலையக மாணவர்களுக்கு கற்றல் கையேடுகளை வழங்கும் நோக்கில் வெண்கரம் அமைப்பினர் நேற்று யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து தமது பயணத்தை ஆரம்பித்தனர்.

டித்வா புயல் பேரிடரால் பாதிக்கப்பட்ட க. பொ. த. சாதாரண தர மாணவர்கள் பரீட்சைக்கு தயாராக வசதியாக வெண்கரம் அமைப்பு கற்றல் கையேடுகளை வழங்கி வருகிறது.

இதன் முதல் கட்டமாக யாழ்ப்பாணம், திருகோணமலையை சேர்ந்த மாணவர்களுக்கு முக்கிய ஐந்து பாடங்களை உள்ளடக்கிய கற்றல் கையேடுகள் வழங்கப்பட்டன.

இந்நிலையில், அடுத்தகட்டமாக மலையக மாணவர்களுக்கு கற்றல் கையேடுகளை வழங்குவதற்காக வெண்கரம் அமைப்பு மலையகம் நோக்கி பயணத்தை ஆரம்பித்துள்ளது. இந்தப் பயணம் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் இருந்து ஆரம்பமானது. பயணத்தின் ஆரம்பத்தில் பல்கலைக்கழகத்தில் உள்ள பரமேஸ்வரா ஆலயத்தில் வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டன. இந்த வழிபாடுகள் மற்றும் ஆரம்ப நிகழ்வில் யாழ்ப்பாண பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பல்கலைக் கழக மாணவர்கள், வெண்கரம் அமைப்பினர் ஆகியோர் கலந்து கொண்டனர். அதனைத் தொடர்ந்து தமது பயணத்தை ஆரம்பித்தனர்.

வெண்கரம் அமைப்பினரின் இந்த செயல்பாடுகளுக்கு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இணை அனுசரணை வழங்கியுள்ளது. வெண்கரம் அமைப்பின் மாணவர் குழுவினர் தன்னார்வ ரீதியாக சேகரித்த நிதியிலேயே

இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ரஷ்ய சுற்றுலாப் பயணிகளை வடக்குக்கு வர ஊக்குவியுங்கள்

### அந்நாட்டு தூதுவரிடம் வடக்கு ஆளுநர் கோரிக்கை



யாழ்ப்பாணம், ஜன. 06

ரஷ்யச் சுற்றுலாவிகள் வருகையை வடக்குக்கு திருப்ப உதவுவதுடன் ரஷ்ய முதலீட்டாளர்கள் இங்கு முதலீடு செய்வதையும் ஊக்குவிக்க வேண்டும் - என்று வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன், இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் லெவன் எஸ். ஜகார்யனிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ரஷ்ய தூதுவர் லெவன் எஸ். ஜகார்யன் வடக்கு மாகாண ஆளுநரை நேற்று ஆளுநரின் செயலகத்தில் சந்தித்தபோதே இந்தக் கோரிக்கையை ஆளுநர் முன்வைத்தார்.

பல தசாப்தங்களுக்குப் பின்னர் ரஷ்யத் தூதுவர் ஒருவர் யாழ்ப்பாணத்துக்கு உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டமை மகிழ்ச்சியளிப்பதாகக் குறிப்பிட்டு ஆளுநர் தூதுவரை வரவேற்றார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த ரஷ்ய தூதுவர், "ரஷ்ய சுற்றுலாவிகள் இலங்கைக்கு அதிகளவில் வருகை தருகின்றனர். எதிர்காலத்தில் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் வாய்ப்புள்ளது. எனினும், வடக்கு மாகாணத்துக்கான ரஷ்ய சுற்றுலாவிகளின் வருகை மிகக் குறைவாகவே உள்ளது. எனவே, இலங்கையின் ஏனைய பகுதிகளுக்கு வரும் ரஷ்ய பயணிகளை ஈர்க்கும் வகையில் வடக்கு மாகாணம் தனது சுற்றுலாத் திட்டங்களை முன்னெடுப்பது சிறப்பாக அமையும், எனச் சுட்டிக்காட்டினார்.

இதற்குப் பதிலளித்த ஆளுநர், இந்தியாவுடனான நேரடி விமான சேவை காரணமாக அதிகளவான இந்தியச் சுற்றுலாப் பயணிகள் வடக்கு மாகாணத்துக்கு வருகை தருகின்றனர். வடக்கு மாகாணமானது சுற்றுலாவிகள் தங்கிச் செல்வதற்கு மிகவும் பாதுகாப்பான சூழலைக் கொண்டுள்ளது. இதனைத் தாங்கள் ரஷ்ய மக்களுக்குத் தெரியப்படுத்துவதன் மூலம் அவர்களின் வருகையை அதிகரிக்க உதவ வேண்டும். வடக்கு மாகாணத்தின் பொருளாதார வளர்ச்சிக்காக ரஷ்ய முதலீட்டாளர்களை இங்கு முதலீடு செய்வதற்கு ஊக்குவிக்குமாறும் ஆளுநர் இதன்போது கோரிக்கை விடுத்தார்.

தொடர்ந்து, ரஷ்ய கலாசார நிலையம் ஊடாக இலங்கையர்களுக்கு வழங்கப்படும் புலமைப்பரிசில் மற்றும் உயர்கல்வி வாய்ப்புகள் குறித்துத் தெளிவுபடுத்திய தூதுவர், இந்த வாய்ப்புகளை வடக்கு மாகாண மாணவர்களும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் மற்றும் ஆளுநரின் இணைப்புச் செயலாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (ஐ-05)

முல்லைத்தீவு சிறுமி மரணம்

## நிபுணர் குழுவினரின் விசாரணை இடைக்கால அறிக்கை சமர்ப்பிப்பு

முல்லைத்தீவு, ஜன. 06

உணவு ஒவ்வாமையால் முல்லைத்தீவு மருத்துவமனையில் 12 வயது சிறுமி உயிரிழந்தமை தொடர்பில் முதல் கட்ட விசாரணை அறிக்கையை நிபுணர்கள் குழு சமர்ப்பித்துள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் சமன் பத்திரண தெரிவித்துள்ளார்.

அந்த இடைக்கால அறிக்கையில் 3 பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதன்படி, மருத்துவமனை அறிக்கையில் குளறுபடிகள் ஏற்பட்டிருக்கலாம் என்று கருதும்பட்சத்தில் அது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்தல் வேண்டும். அத்துடன், அவசர சிகிச்சை பிரிவில் குறித்த நேரத்தில் கடமையில் இருந்த தாதிய உத்தியோகத்தரை சாதாரண நோயாளர் விடுதிக்கு மாற்ற வேண்டும். குற்றஞ்சாட்டப்பட்டுள்ள மருத்துவரை, தனியாக செயல்பட விடாது, மற்றொருவரின் கண்காணிப்பின் கீழ் செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

இந்த பரிந்துரைகளை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு முல்லைத்தீவு மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்தநிலையில், சம்பவம் தொடர்பான முழுமையான விசாரணை அறிக்கை ஒரு வார காலத்துக்குள் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கிறோம். அதன் பின்னரே அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் - என்றும் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

முன்னதாக, கடந்த 21ஆம் திகதி உணவு ஒவ்வாமையால் சிலாவத்தையை சேர்ந்த 12 வயது சிறுமி முல்லைத்தீவு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு உயிரிழந்தார். அவரின் இறப்பில் சந்தேகம் தெரிவிக்கப்பட்டிருந்தமை அறிந்ததே. (ஐ)

## தற்காலிக பதவிகளை வைத்திருப்போர் தமிழ் அரசு கட்சிமீது சேறுபூசுகின்றனர்

### சிவமோகன் தெரிவிப்பு

வவுனியா, ஜன. 06

திருட்டுத்தனமாக - அரசியல் அலங்கோலத்தனமாக - துரோகத்தனங்களால் தமிழ் அரசு கட்சியின் தற்காலிக பதவிகளை வைத்திருப்போர் கட்சிக்கு சேறு பூசும் நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றனர் - இவ்வாறு அந்தக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிவமோகன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பாராளுமன்ற உறுப்பினர்களான சிறீதரனுக்கும் சிறீநேசனுக்கும் எதிராக தமிழ் அரசு கட்சி என்ற போர்வையில் அவிழ்த்து விடப்படும் சேறுபூசல்கள். தொடர்பாக கவனம் எடுத்துள்ளோம்.

இருவரும் அவர்களது மாவட்டங்களில் அதிகூடிய வாக்குகளை பெற்று நேரடியாக பாராளுமன்றம் தெரிவானவர்கள். இன்று அவர்களுக்கு எதிராக தமிழ் அரசுக் கட்சி என்ற போர்வையின் ஊடாக சேறு பூசல்கள் செய்கிறார்கள் என்றால் இவர்களா கட்சியில் விசுவாசம் உள்ளவர்கள். திருட்டுத்தனமாக - அரசியல் அலங்கோலத்தனமாக - துரோகத்தனங்களால் - தமிழ் அரசு கட்சியின் தற்காலிக பதவிகளை வைத்துக்கொண்டிருப்பவர்கள் முன்னெடுக்கும் நடவடிக்கைகளே இவை.

தமிழ்த் தேசியத்துடன் நிற்பவர்கள் யார் கட்சியை சேற்றுக்குள் புதைக்க நினைப்பவர்கள் யார் என்று மக்களுக்கு தெரியும் - என்றும் கூறினார். (ஐ-10)

## கரவெட்டி பிரதேச செயலகத்துக்கு உதவி பிரதேச செயலர் நியமனம்!

யாழ்ப்பாணம், ஜன. 06

கரவெட்டி பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலாளராக செ. சாருதர்ஷன் நியமிக்கப்பட்டுள்ளார்.



அவருக்கான நியமனக் கடிதத்தை நேற்றைய தினம் யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் ம. பிரதீபன் வழங்கி வைத்தார்.

அவர் நேற்றைய தினம் கரவெட்டி பிரதேச செயலகத்தில் தமது கடமையை பொறுப்பேற்றார். (ஐ-02-05)

## தேவரையாளி இந்து கல்லூரிக்கு குடிதண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம்


வடமராட்சி, ஜன. 06

கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரிக்கு தொண்டைமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் குடிதண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

500இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கும் அந்தப் பாடசாலையில் குடிதண்ணீர் பிரச்னை நிலவுகிறது. இதனைத் தீர்க்கும் நோக்கில் பாடசாலையின் கோரிக்கைக்கு அமைவாக சுமார் 5 இலட்சம் ரூபாய் செலவில் இந்த இயந்திரம் நேற்று திங்கட்கிழமை கையளிக்கப்பட்டது.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ. மோகனதாஸ் சுவாமிகள் இந்த இயந்திரத்தை வழங்கி வைத்தார்.

இதேவேளை பளை பிரதேச சபை தூய்மை பணியாளர்கள் 15 பேருக்கு 75 ஆயிரம் ரூபாய் பெறுமதியான அத்தியவசியமான உணவுப் பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டன. (ஐ-02-08)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
06.01.2026 செவ்வாய்கிழமை
விசுவாவசு வருடம், மார்கழி 22

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# தமிழர் தரப்பு என்றால் யார்?

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கு முன்னர் தமிழர் தரப்புடன் பேசவேண்டும் என்று ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் பேச்சாளர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்திருக்கிறார். கேள்வி எந்தத் தமிழர் தரப்புடன் அரசாங்கம் பேசவேண்டும்? ஏனெனில், பல தரப்புகள் இருக்கின்றன. இலங்கை தமிழ் அரசு கட்சி தங்களை பிரதான கட்சியென்று கூறுகிறது.

ஆனால், அண்மையில் ஆச்சரியமாக அனைவரும் ஒன்றிணைந்து ஒரு கருத்தை வலியுறுத்தி விட்டார்களோ என்று எண்ணும் முதலே நாங்கள் அப்படியெல்லாம் ஒரு தரப்பாக ஆக மாட்டோம் என்று கஜேந்திர குமார் பொன்னம்பலம் முந்திக்கொண்டார். இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கருடனான சந்திப்பின்போது, தான் மட்டுமே தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பில் சரியாக விடயங்களை சுட்டிக்காட்டினாரெனத் தெரிவித்திருந்தார். இதனைத் தொடர்ந்து அவர் உண்மைகளை பேசவில்லை என்னும் அடிப்படையில் இலங்கை தமிழ் அரசு கட்சியின் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் தெரிவித்திருந்தார். இதன் மூலம் தமிழ் கட்சிகள் ஒரு தரப்பாக விடயங்களை முன்வைக்கவில்லை என்னும் உண்மையே வெளிப்பட்டது.

யுத்தம் முடிவுற்று பதினாறு ஆண்டுகள் சென்றுவிட்டன. இன்னும் தமிழர் அரசியலை ஒரு தரப்பாகக் கையாளும் நிலையில் தமிழ் கட்சிகள் இல்லை. ஒரு சில மாதங்களுக்கு முன்னர் ஓர் அரசியல் கூட்டணியாகவும் பின்னர் இன்னொரு கூட்டணியாகவும் தங்களை வெளிப்படுத்துகின்றனர்.

ஒரு சிலரை இணைத்துக் கொண்டு தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளை ஓர் அணியினர் சந்திக்கின்றனர். அங்கு தமிழீழம்தான் நீண்டகால இலக்கு. ஆனால், இடைப்பட்ட காலத்தில் சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வு ஒன்றை எதிர்பார்க்கிறார்கள் என்று தமிழ்நாட்டு அரசியல்வாதி ஒருவர் கூறுகிறார். அவர் அவ்வாறு பேசுகின்றபோது அருகில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் நின்று கொண்டிருந்தனர்.

ஒரு தெளிவான அரசியல் புரிதல் இல்லை. கூட்டு அரசியல் செயல்பாடு இல்லை. கருத்தொருமித்து விடயங்களை முன்னெடுக்கக் கூடியளவுக்கான அரசியல் முதிர்ச்சி இல்லை. அவ்வப்போது நிகழும் விடயங்களுக்கு எதிர்வினையாற்றுவதைத் தவிர, தமிழ் கட்சிகள் கடந்த பதினாறு வருடங்களாக எதனையும் செய்ததாக இல்லை. இந்த நிலையில் ஆட்சியாளர்கள் புதிய அரசியல் யாப்பு தொடர்பில் தமிழர் தரப்புடன் பேசுவது என்றால் யாருடன் பேசுவது?

எந்த அடிப்படையில் தமிழ் கட்சிகள் அரசாங்கத்துடன் பேசும்? தங்களுக்குள் ஓர் ஐக்கிய முன்னணியை ஏற்படுத்திக் கொண்டா அல்லது தனித்தனியாகவா? புதிய அரசியல் யாப்பு தொடர்பில் பேசுவதாயின், மாகாண சபைகள் தேர்தலை நடத்த வேண்டிய அவசியமில்லை என்னும் முடிவுக்கு அரசாங்கம் வர முடியும். இப்படித்தான் மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சிக் காலத்திலும் நடந்தது. இல்லை முதலில் மாகாண சபைகள் தேர்தல் நடத்தப்பட வேண்டும். அதன் பின்னர் புதிய அரசியல் யாப்பு பற்றிப் பேசலாம் என்றால் அதற்கு ஒரு தமிழ் அணி எதிர்ப்புத் தெரிவிக்கும். புதிய அரசியல் யாப்பில் ஏக்கிய ராஜ்ய இருக்கிறது. அதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் ஓர் அணி கூறும். தமிழர் தரப்புக்குள் தற்போதைய நிலையில் சுயேச்சை பாராளுமன்ற உறுப்பினரும் உள்ளடங்குவார். தமிழர் தரப்பு என்று வருகின்றபோது அவரும் ஒரு தரப்பாக தன்னை முன்னிறுத்துவார்.

## வெவண்டன் தமிழ் ம. வித்தியாலயத்தை தற்காலிக இடத்துக்கு மாற்ற தீர்மானம்!

நுவரெலியா, ஜன. 06

மண்சரிவு அபாயம் காரணமாக சுமார் ஒரு மாதத்துக்கும் மேலாக மூடப்பட்டிருந்த கொத்மலை, தவலந்தன்ன - இறம்பொடை வெவண்டன் தமிழ் மகா வித்தியாலயத்தை வேறு இடத்தில் தற்காலிகமாக நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பாடசாலை தவலந்தன்ன பகுதியில் அமைந்துள்ள தொண்டமான் கலாசார மத்திய நிலையத்தில் தற்காலிகமாக நடத்தப்படும் என்று நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மஞ்சுள சுரவீர ஆராச்சி தெரிவித்தார்.

இறம்பொடை பகுதியில் ஏற்பட்ட மண்சரிவு வெவண்டன் தமிழ் மகா வித்தியாலயம் அருகிலேயே ஆரம்பமாகியுள்ளது.

பாடசாலைக்குச் செல்லும் வீதியின் பல இடங்களில் வெடிப்புகள் ஏற்பட்டுள்ளதால், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் பாதுகாப்பையும் அவர்களின் மனநிலையையும் கருத்தில் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தொண்டமான் கலாசார மத்திய நிலையத்தில் எதிர்வரும் சில நாட்களில் குறித்த பாடசாலையின் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அங்கு, தரம் 1 முதல் தரம் 11 வரை 143 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். 13 ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றனர்.

## சிறீ லங்கா சுதந்திர கட்சியின் தேசிய அமைப்பாளராக சம்பத்

கொழும்பு, ஜன. 06

சிறீ லங்கா சுதந்திர கட்சியின் புதிய தேசிய அமைப்பாளராக பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க கடமைகளை உத்தியோகபூர்வமாக நேற்று திங்கட்கிழமை பொறுப்பேற்றார்.

சிறீ லங்கா சுதந்திர கட்சியின் பொதுச்செயலாளர் நிமால் சிறிபால டி சில்வாவிடம் நியமனக் கடிதத்தைப் பெற்றுக் கொண்ட பின்னர் சாமர சம்பத் தசநாயக்க அந்தக் கட்சியின் புதிய தேசிய அமைப்பாளராக பதவிப்பிரமாணம் செய்து கொண்டார். (ஐ)

## இலங்கை மருத்துவர் சங்கத்தின் புதிய தலைவராக மணில்க தெரிவு

கொழும்பு, ஜன. 06

இலங்கை மருத்துவ சங்கத்தின் 132ஆவது தலைவராகக் கொழும்பு தேசிய மருத்துவமனையின்மணில்க சுமனதிலக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இலங்கையின் பழமையானதும் தனித்துவமானதுமான இலங்கை மருத்துவ சங்கத்தின் இந்த வருடத்துக்கான தலைவர் தெரிவில் ஒருமனதாக அவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவரின் பதவியேற்பு விழா எதிர்வரும் 10ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது. (ஐ)

## பச்சிலைப்பள்ளியில் பாரம்பரிய உணவகத்துக்கு அடிக்கல் நாட்டல்

கிளிநொச்சி, ஜன. 06

பச்சிலைப்பள்ளி பிரதேச சபை வளாகத்தில் பாரம்பரிய உணவகத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

ஒரு கோடியே 99 இலட்சம் ரூபாய் செலவில் இந்த பாரம்பரிய உணவகம் அமைக்கப்படவுள்ளது.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சு. சுரேன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் சா. சுதர்சன், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் இ. த. ஜெயசீலன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஐ)

## டிராக்டரிலிருந்து தவறி விழுந்தவர் உயிரிழந்தார்

கொழும்பு, ஜன. 06

ஓடிக்கொண்டிருந்த டிராக்டரிலிருந்து தவறி விழுந்து ஒருவர் உயிரிழந்தார்.

அநுராதபுரம் - மகாவிலாச்சிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உலுக்குளம் கிராம வீதியில் நேற்றுமுன்தினம் இரவு இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்த நபர் பேமடுவ மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த 51 வயது நபரே உயிரிழந்தார். (ஐ)


## உயர்தர மாணவர்க்கான கருத்தரங்குகளுக்கு தடை

கொழும்பு, ஜன. 06

2025 ஆம் ஆண்டுக்கான க. பொ. த. உயர்தரப் பரீட்சை தொடர்பான அனைத்து வகுப்புகள், கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள் இன்று செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் தடை செய்யப்படுகின்றன என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

2025ஆம் ஆண்டுக்கான க. பொ. த. உயர்தரப் பரீட்சையின் மீதமுள்ள பாடங்கள் எதிர்வரும் 12 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் இந்த தடை விதிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஜனவரி - 06 செவ்வாய்க்கிழமை**
குரோதி வருடம் - மார்கழி 22
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : சதுர்த்தி




**மேடம்**
குடும்பத்தில் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும்.

**இடபம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். திடீர் முடிவுகள் எடுப்பீர்கள். தோற்றப் பொலிவு கூடும். வியாபாரத்தில் எதிர்பாராத லாபம் உண்டு. உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எந்த காரியத்தை தொட்டாலும் இரண்டு மூன்று முறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். ஊழியர்களின் சொந்த விஷயங்களில் தலையிட வேண்டாம்.

**கடகம்**
கணவன் மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். எதிர்பார்த்த உதவிகள் தாமதமாகும். பழையகடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். மறைமுக எதிர்ப்புகள் வந்து நீங்கும்.

**சிம்மம்**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். காணாமல் போன முக்கிய ஆவணம் ஒன்று கிடைக்கும். சபைகளில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் மேலதிகரிகளுக்கு ஆலோசனை தருவீர்கள்.

**கன்னி**
சாதிக்க வேண்டுமென்ற எண்ணம் வரும். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். வெளியூர் பயணங்கள் திருப்திகரமாக அமையும். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்று கொள்வீர்கள்.

**துலாம்**
சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படுவார்கள். பிள்ளைகளின் பிடிவாதம் தளரும். கண்டும் காணாமல் சென்று கொண்டிருந்தவர்கள் வலிய வந்து பேசுவார்கள். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**விருட்சிகம்**
சந்திராஷ்டமம் தொடர்வதால் உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வு மனப்பான்மை வந்து செல்லும். வாக்குறுதிகளை நிறைவேற்றப் போராட வேண்டி இருக்கும்.

**தனுசு**
எதையும் தன்னம்பிக்கையுடன் செய்ய தொடங்குவீர்கள். சகோதர வகையில் நன்மை உண்டு. கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். பெரிய பொறுப்புகளை ஏற்பீர்கள். நட்பால் ஆதாயம் உண்டு.

**மகரம்**
குடும்பத்தாரின் சுபநிகழ்ச்சிகளின் கலந்து கொள்வீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. புது பொருள் வந்து சேரும். வழக்கில் சதகமான தீர்ப்பு வரும். வியாபாரத்தில் இரட்டிப்பு லாபம் உண்டு.

**கும்பம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும்.

**மீனம்**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். மகளுக்கு நல்ல வரன் அமையும். புதுவேலை கிடைக்கும். நட்பு வட்டம் விரியும். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். உயரும் நாள்.

# வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலய காணியை விடுவிக்க கோரிக்கை

## ஆளுநருக்கு சத்தியலிங்கம் எம். பி. கடிதம்

*வவுனியா, ஜன. 06*

வவுனியா- நெடுங்கேணி வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்துக்கான நிலம் மற்றும் பாதையை விடுவித்து தருமாறு வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகனுக்கு இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ப. சத்தியலிங்கம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று திகதியிட்டு குறித்த கடிதம் ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வவுனியா மாவட்டத்தின் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வரலாற்று தொண்மைமிக்க வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் வழிபாட்டு செயல்பாடுகளுக்காக ஆலயம் அமைந்துள்ள பகுதியின் ஓர் ஏக்கர் காணியை ஆலயத்துக்கு விடுவித்துத்தர ஆவன செய்யுமாறு ஆலய அறங்காவலர் சபையினர் என்னிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பிலான கோரிக்கையை ஏற்கனவே தங்களுக்கு தாம் விடுத்துள்ளதாகவும் எனினும் எந்தவித திருப்திகரமான பதிலும் தமக்கு இதுவரை கிடைக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் குறித்த ஆலயத்துக்கு செல்லும் பாதையை வவுனியா வடக்கு பிரதேச சபைக்கு விடுவித்து தரும் பட்சத்தில் குறித்த பாதையை தம்மால் புனரமைக்க முடியுமென வவுனியா வடக்கு பிரதேச சபையினரும் தெரிவித்துள்ளனர்.

எனவே, தாங்கள் இவ்விடயத்தில் நேரடியாக தலையீடு செய்து குறித்த வரலாற்று தொண்மைமிக்க ஆலயத்துக்கான காணி மற்றும் பாதையை மிகவிரைவாக விடுவித்துத்தர ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன் என அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-10)

# மதுபோதையில் பேருந்தை செலுத்தி சென்ற இ. போ. ச. சாரதி அல்லைப்பிட்டியில் கைது!

*யாழ்ப்பாணம், ஜன. 06*

ஊர்காவற்றுறை - யாழ்ப்பாணம் இடையே சேவையில் ஈடுபடும் வழித்தடம் 777, இலங்கை போக்குவரத்து சபையின் சாரதி ஒருவர் மதுபோதையில் பேருந்தை செலுத்திச் சென்ற நிலையில் ஊர்காவற்றுறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் மாலை 04. 30 மணியளவில் யாழ். - ஊர்காவற்றுறை வீதியின் அல்லைப்பிட்டி பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இது குறித்து பொலிஸார் கூறுகையில்,

இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான ஊர்காவற்றுறை - யாழ்ப்பாணம் இடையிலான சேவையை முன்னெடுக்கும் வழித்தடம் 777 இலக்க பேருந்தை செலுத்திச் சென்ற சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பேருந்து அதிவேகத்தில் அதிகளவான பயணிகளுடன் செல்வதை அவதானித்த ஊர்காவற்றுறை போக்குவரத்து பொறுப்பதிகாரி சமன் குமார தலைமையிலான பொலிஸ் அணியினர் பேருந்தை வழிமறித்து சோதனையிட்டனர்.

சோதனையின் போது சாரதியிடம் சாரதி அனுமதிப் பத்திரம் இல்லை. அத்துடன் அவர் மதுபோதையில் இருந்ததை அவதானித்த பொலிஸார் அவரை மது போதையில் சாரதித்துவம் செய்தமை மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் இன்மை உள்ளிட்ட காரணங்களுக்காக கைது செய்து ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளனர்.

பொலிஸாரின் விசாரணைகளின் பின் குறித்த சாரதி ஊர்காவற்றுறை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படுவார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-03)

# எச்சரிக்கையை மீறி தாளையடி கடலுக்குள் இறங்கும் அதிகளவு சுற்றுலாப் பயணிகள்

*யாழ்ப்பாணம், ஜன. 06*

வெளிநாடு மற்றும் இலங்கையின் பல பகுதிகளில் இருந்தும் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் யாழ்ப்பாணம்- வடமராட்சி கிழக்கு தாளையடி கடற்கரைக்கு வருகை தருகின்றனர்.

இருப்பினும், இந்தக் கடற்கரையானது பாதுகாப்பு இன்றி காணப்படுவதால் கடல் பரப்புக்குள் இறங்க வேண்டாம் என வடமராட்சி கிழக்கு பொது அமைப்புகள் அதிவித்த போதும் அதனை பொருட்படுத்தாது கடற்கரைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் கடலுக்குள் இறங்கி நீராடுகின்றனர்.

நேற்று முன்தினமும் அதிகளவானவர்கள் கடலின் ஆழமான பகுதிக்குள் சென்று நீராடி புகைப்படங்கள் எடுத்துள்ளனர்.

இதனை அவதானித்த ஊர் மக்கள் கடலின் தன்மை தொடர்பில் அவர்களுக்கு கூறிய போதும் அதனை செவிமடுக்காமல் நீராடியுள்ளனர்

இந்தச் சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் யுகதீஸூக்கு அறிவித்த போது, அவர் சம்பவ இடத்துக்கு வருகை தந்து கடலுக்குள் இறங்க வேண்டாம் என சுற்றுலாப் பயணிகளிடம் கூறிச் சென்றுள்ளார். (எ)

# தெல்லிப்பழையில் திருவிளையாடல் புராண சொற்பொழிவு

*யாழ்ப்பாணம், ஜன. 06*

தெல்லிப்பழை மாவை கலட்டி அருள்மிகு நாகதம்பிரான் தேவஸ்தானத்தில் சைவ வாழ்வியலில் திருவிளையாடல் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் வாராந்த திருவிளையாடல் புராணச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் 39 எதிர்வரும் 09 ஆம் திகதி வெள்ளிக்கிழமை

மாலை 04.00 மணிக்கு நடைபெறவுள்ளது. பரஞ்சோதிமுனிவர் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலை நிகழ்வும் சைவப் புலவர் பிரசங்க பூஷணம் செ. த. குமரனின் "நாரைக்கு முத்தி கொடுத்த படலம்"என்னும் சொற்பொழிவும் நடைபெறவுள்ளது.

சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ)

# முல்லைத்தீவில் பலத்த மழை பெய்யக்கூடும்

*கொழும்பு, ஜன. 06*

கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் நுவரெலியா, மாத்தளை, பொலநறுவை மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை பெய்யும் சாத்தியம் நிலவுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

கிழக்கு மாகாணத்திலும் நுவரெலியா, மாத்தளை, பதுளை, பொலநறுவை மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலும் சில இடங்களில் 50 மில்லி மீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழை பெய்யக்கூடும் என அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அநுராதபுரம், யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களிலும் மழை பெய்யக்கூடும்.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் பிற்பகல் 02.00 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு பணவனுப்பல் மூலம் 700 கோடி டொலர்கள் வருமானம்

## அமைச்சர் விஜித ஹேரத் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 06

**வெளிநாட்டு பணவனுப்பல்கள் மூலம் 700 கோடி அமெரிக்க டொலருக்கும் அதிக வருமானமும் சுற்றுலாத் துறை மூலம் 320 கோடி டொலர் வருமானமும் ஈட்டப்பட்டுள்ளது என்று வெளிவிவகார, வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.**



இதேவேளை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத் துறையின் மூலம் 2025 ஆம் ஆண்டில் ஆயிரத்து 100 கோடி அமெரிக்க டொலர் வருமானத்தை ஈட்ட முடிந்துள்ளது என்றும் அமைச்சர் கூறினார்.

வெளிவிவகார அமைச்சில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

# போதைப்பொருள் குற்றங்கள் 500 பொலிஸார்மீது நடவடிக்கை

## பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 06

போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுடன் தொடர்புடைய சுமார் 500 பொலிஸ் அதிகாரிகள்மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் தொடர்பான குற்றங்களில் ஈடுபட்ட பல பொலிஸ் அதிகாரிகளை பதவி நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அநுராதபுரத்திலுள்ள இலங்கை பொலிஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற பொலிஸ் அதிகாரிகளின் பட்டமளிப்பு விழாவில் பங்கேற்ற போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். (ஐ)

# குற்றச்செயல்களுடன் தொடர்பு: 22 பேர் பொலிஸாரிடம் சிக்கினர்

கொழும்பு, ஜன. 06

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் குற்றச்செயல்கள் மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு விசேட நடவடிக்கையின் கீழ், பல்வேறு குற்றச்செயல்களுடன் நேரடித் தொடர்புடைய 22 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது 28, 333 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், பல்வேறு சம்பவங்கள் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் 263 பேரும் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 141 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதுதவிர மதுபோதையில் வாகனம் செலுத்தியமை தொடர்பில் 424 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு நேற்று தெரிவித்துள்ளது. (எ)

# வெட்டுக் காயங்களுடன் ஆணின் சடலம் மீட்பு!

கொழும்பு, ஜன. 06

வெட்டுக்காயங்களுடன் ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக காலி - கரந்தெனிய பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று திங்கட்கிழமை காலை இந்த சடலம் மீட்கப்பட்டது. இவ்வாறு, சடலமாக மீட்கப்பட்டவர் கரந்தெனிய, கிரிபெத்தே பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடையவராவார்.

இவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (04) இரவு அல்லது இன்று காலை கொலை செய்யப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கரந்தெனிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# "பாதாள குழுக்களை ஒழிக்க பல்வேறு வேலைத்திட்டங்கள்"

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

கொழும்பு, ஜன. 06

பாதாள உலகக் குழுக்கள், திட்டமிட்ட குற்றச்செயல்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல் என்பனவற்றை நாட்டிலிருந்து ஒழிப்பதற்காக அரசாங்கம் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகிறது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

அநுராதபுரம் பொலிஸ் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு கூறினார். (எ)

பாதாள உலக கும்பலை சேர்ந்த

# சொத்தி உபாலியின் மகள் உட்பட 2 பெண்கள் பொலிஸாரால் கைது

கொழும்பு, ஜன. 06

பாதாள உலக கும்பலைச் சேர்ந்த "சொத்தி உபாலி" என்று அழைக்கப்படும் அரம்பவலகே தொன் உபாலி ரஞ்ஜித் என்பவரின் மகள் உட்பட இரண்டு பெண்கள் மாலம்பே பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாலம்பே பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இந்த இரண்டு பெண்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மற்றைய பெண் சிறைச்சாலையில் உள்ள போதைப்பொருள் கடத்தல்காரர் ஒருவரின் மருமகள் என பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட பெண்களிடமிருந்து 7 கிராம் ஐஸ் போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மாலபே பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# பெருந்தொகை கசிப்பு கோடாவுடன் பெண் கைது

கொழும்பு, ஜன. 06

கசிப்பு, கோடாவுடன் பெண் ஒருவர் கேகாலை - மீரிகம பொலிஸாரால் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

மீரிகம பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபரான பெண் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் கேகாலை அம்பேபுஸ்ஸ பிரதேசத்தைச் சேர்ந்த 56 வயதுடையவர் ஆவார்.

சந்தேக நபரிடமிருந்து 1080 லீற்றர் கோடா, 81 லீற்றர் கசிப்பு என்பன கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனவள திணைக்களம் கையகப்படுத்திய

# காணிகளை மக்களிடம் கையளிக்க நடவடிக்கை

திருகோணமலை, ஜன. 06

திருகோணமலை- வெல்வேரி பகுதியில் வனவள பாதுகாப்பு திணைக்களம் கையகப்படுத்தியுள்ள மக்களின் காணிகளை விரைவில் அவர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று வெளிவிவகார பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர உறுதியளித்துள்ளார்.

நேற்று முன்தினம் வெல்வேரி கிராமத்துக்கு சென்று பார்வையிட்ட பின்னரே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

“திருகோணமலை மாவட்ட பட்டனமும் சூழலும் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட வெல்வேரி கிராமத்துக்கு சென்று நிலைமைகளை ஆராய்ந்தோம். குறித்த மக்கள் பல வருடங்களுக்கு முன்னர் வன்செயல் காரணமாக இடம்பெயர்ந்துள்ளனர். இந்த நிலையில், தற்போது அங்கு வாழ்வாதார பிரச்னை ஏற்பட்டுள்ளது.

வெல்வேரி கிராமத்துக்கு சென்று பார்வையிட்டபோது அங்கு மக்கள் வாழ்ந்ததற்கான அடையாளங்கள் காணப்படுகின்றன. அங்கு விவசாயம் மேற்கொண்டதற்கான கிணறுகள், வயல்நிலங்கள், எஞ்சிய கட்டுமானங்கள் போன்ற பல விடயங்கள் காணப்படுகின்றன.

அத்துடன் இவற்றுக்கான ஆவணங்களையும் குறித்த மக்கள் வைத்திருக்கின்றார்கள். எனவே, இவை போதுமானவையாக இருப்பதாக நம்புகின்றேன். பல்வேறுபட்ட இடங்களில் வனவள திணைக்களத்திடமிருந்து காணிகளை விடுவித்து மக்களுக்கு கொடுத்திருக்கின்றோம்.

அந்தவகையில் வெல்வேரி மக்களுடைய காணிகளையும் விரைவில் வனவள பாதுகாப்பு திணைக்களத்திடமிருந்து விடுவித்து மக்களின் வாழ்வாதாரத்துக்காக வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம்”- என்றார்.

திருகோணமலை - வெல்வேரி கிராமத்தில் பல தசாப்த காலமாக விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு, வாழ்ந்து வந்த மக்கள் நாட்டில் ஏற்பட்ட தொடர்ச்சியான வன்செயல் காரணமாக உயிர் அச்சுறுத்தலுக்கு மத்தியில் அங்கிருந்து தொடர்ச்சியாக இடம்பெயர்ந்து மீளக் குடியமர்ந்து வந்தனர்.

இந்த நிலையில் 1983ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து பாதுகாப்பு காரணமாக மீண்டும் மீளக் குடியமர அனுமதிக்கப்படாத நிலையில் 2010ஆம் ஆண்டுக்கு பின்னர் குறித்த பகுதியில் வனவள பாதுகாப்பு திணைக்களத்தால் எல்லைக்கற்கள் இடப்பட்டு கையகப்படுத்தப்பட்டிருந்தது.

பின்னர் குறித்த காணிகளை ஹெட்டியாராய்ச்சி என்ற நபருக்கு நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், அவர் அதில் எந்தவொரு நடவடிக்கையையும் இதுவரை மேற்கொண்டிருக்கவில்லை.

1970 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே 30இற்கு மேற்பட்ட குடும்பங்கள் அப்பகுதியில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்ததாகவும், வனவள பாதுகாப்பு திணைக்களத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ள பகுதிக்குள் தாங்கள் வாழ்ந்தமைக்கான அடையாளங்களாக வீட்டின் சிதைவுகள், சீமெந்தால் கட்டப்பட்ட சுமார் 10 அடி விட்டமுடைய பல கிணறுகள், நீர்ப்பாசனம் மேற்கொள்ளப்பட்ட கால்வாய்கள் உட்பட பல ஆதாரங்களும் தமது காணிக்கான ஆவணங்களும் வைத்திருப்பதாகவும் மக்கள் தெரிவித்தனர். (எ)

# மட்டு. ஒந்தாச்சிமட கடற்கரையில் கரையொதுங்கிய மர்மப்பொருள்

மட்டக்களப்பு, ஜன. 06

மட்டக்களப்பு, மண்முனை தென் எருவில்பற்று பிரதேசத்துக்குட்பட்ட ஒந்தாச்சிமடம் கடற்கரையில் மர்மப்பொருள் கரையொதுங்கியுள்ளது.

இவ்வாறு கரையொதுங்கிய மர்மப்பொருள் விண்கலம் ஒன்றின் பாகமாக இருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

இந்திய தேசிய கொடி பொறிக்கப்பட்ட மர்மப்பொருட்கள் கடந்த சில நாட்களுக்கு முன்னர் திருகோணமலையிலும் கரையொதுங்கியிருந்தன. இது தொடர்பில் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (எ)

# படகு எடுக்க சென்றவரை இழுத்துச்சென்ற முதலை

அக்கரைப்பற்று, ஜன. 06

அம்பாறையில் அக்கரைப்பற்று - பெரியபள்ளக்காடு பகுதியில் உள்ள கல்லோயா ஆற்றில் முதலையால் இழுத்துச் செல்லப்பட்டு ஒருவர் காணாமல் போயுள்ளார் என்று அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

ஒலுவில் 01 பகுதியைச் சேர்ந்த 37 வயது நபரே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

கல்லோயா ஆற்றின் மறுகரையில் நிறுத்தப்பட்டிருந்த படகை எடுக்க மற்றொரு நபருடன் நீந்திச் சென்றபோது, முதலை அவரை இழுத்து சென்றதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

காணாமல் போனவரை தேடுவதற்காக பொலிஸ் அதிகாரிகள், கடற்படை குழுவினர், சம்மாந்துறை வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் உள்ளூர்வாசிகள் இணைந்து கூட்டு நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, அக்கரைப்பற்று பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# “கல்வி சீர்திருத்த விடயத்தில் அரசாங்கம் சர்ச்சைகளுக்கு முடிவு கட்டவேண்டும்”

சாய்ந்தமருது, ஜன. 06

கல்விச் சீர்திருத்த விடயத்தில் அரசாங்கம் சர்ச்சைகளுக்கு முடிவு கட்டவேண்டும் என்று பெண்கள் படையணி அமைப்பின் தலைவி நிகாஸா ஷரீன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.




அம்பாறை- சாய்ந்தமருது எம். எஸ். காரியப்பர் பாலர் பாடசாலையின் வருடாந்த பட்டமளிப்பு மற்றும் பரிசளிப்பு விழா சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

கல்விச் சீர்திருத்தம் என்ற பெயரில் கல்வி அமைச்சின் புதிய பாடத்திட்டத் தொகுதிகள் தொடர்பில் எழுந்துள்ள விமர்சனம் மற்றும் பாலியல் கல்வி பற்றிய சர்ச்சை என்பன இன்று பெரும் பூதாகரமாக மாறியுள்ளது.

இதற்கு எதிராக நாட்டின் பெண்கள் அமைப்புகள், தொழிற்சங்கங்கள் என்பன தங்களது கடும் எதிர்ப்பை தொடர்ச்சியாக வெளியிட்டு வருகின்றன.

எனவே, இந்த சர்ச்சைகளுக்கு உடன் முடிவு கட்ட அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக்கொள்கின்றோம்.

கல்வி என்பது ஒரு மனிதனின் வாழ்க்கைக்கு ஒளியூட்டும் தீபம் என்றால், அந்த தீபம் முதன் முதலில் ஏற்றப்படுவது பாலர் பாடசாலையில்தான்.- என்றார். (எ-01)

# 7,000 பாதுகாப்பற்ற சிறுவர்கள் கிழக்கில் இதுவரை அடையாளம்

## பிரதி பொலிஸ் மா அதிபர் தகவல்

கல்முனை, ஜன. 06

கிழக்கு மாகாணத்தில் இதுவரை 7,000இற்கும் மேற்பட்ட பாதுகாப்பற்ற சிறுவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று கிழக்கு பிராந்தியத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜயசுந்தர தெரிவித்தார்.

குடும்ப சூழ்நிலை காரணமாக பாதிக்கப்பட்ட பிள்ளைகளை பாதுகாப்பதற்கான சரோஜா திட்டத்துடன் இணைந்து அத்தகைய பிள்ளைகளுக்கான பாடசாலை கற்றல் உபகரணங்களை வழங்கும் விழா அம்பாறை தலைமையக பொலிஸ் துறை கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,



“சரோஜா திட்டம் கிழக்கு மாகாணத்தில் குடும்ப சூழ்நிலையால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளை அடையாளம் காணும் ஒரு திட்டம்.

2024 ஆம் ஆண்டில் கிழக்கு மாகாணத்தில் 304 சிறுவர்கள் பல்வேறு வகையான துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகினர். இதுபோன்ற சூழ்நிலையில் சிக்கியவர்களில் 80 சதவீதம் பேர் பாதுகாப்பற்ற குழந்தைகள்.

சரோஜா திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போது, இலங்கை பொலிஸ் துறையினர் கிழக்கு மாகாணத்தில் 912 பாதுகாப்பற்ற குழந்தைகளை அடையாளம் கண்டிருந்தது. ஆனால், கிழக்கு மாகாணத்தில் இதுவரை 7,000இற்கும் மேற்பட்ட பாதுகாப்பற்ற சிறுவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் அதிக எண்ணிக்கையிலான பாதுகாப்பற்ற குழந்தைகள் அம்பாறை பிரிவில் உள்ளனர். அந்தப் பிரிவில் 2,818 குழந்தைகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்தக் குழந்தைகளை அடையாளம் காண்பது பயனற்றது. அவர்களுக்காக ஒரு திட்டத்தை உருவாக்க வேண்டும். இதன் முக்கிய அம்சம் இந்த குழந்தைகள் பாடசாலைக்கு செல்ல வேண்டும் என்பதாகும்.”- என்றார். (எ-01)

# களுவாஞ்சிக்குடியில் விபத்து



மட்டக்களப்பு, ஜன. 05

மட்டக்களப்பு- கல்முனை பிரதான வீதியின் களுவாஞ்சிக்குடி அற்புத பிள்ளையார் ஆலயத்துக்கு முன்னால் உள்ள தொலைத் தொடர்பு கம்பத்தில் ஜீப் வாகனம் ஒன்று மோதிய பின்னர் ஆலயத்தின் மதிலிலும் மோதியது. இந்த விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்றது.

கல்முனை பக்கமிருந்து மட்டக்களப்பு பக்கம் நோக்கி பயணித்த வாகனமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது. சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த நிலையிலேயே இவ் விபத்து சம்பவித்துள்ளது. இந்த நிலையில், சாரதி சிறுகாயங்களுக்குள்ளான நிலையில் தெய்வாதீனமாக உயிர்பிழைத்த நிலையில் களுவாஞ்சிக்குடி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு, விபத்துக்குள்ளான வாகனத்தின் முன்பகுதி பலத்த சேதத்துக்குள்ளாகியுள்ளது. இந்த நிலையில், சம்பவ இடத்துக்கு விரைந்த களுவாஞ்சிக்குடி போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராளுமன்ற...

மாகாண சபைகள் தேர்தலை மிக விரைவில் நடத்துவதற்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. 2017ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல் (திருத்தச்) சட்டத் தின் 3(ஆ) பிரிவின் கீழ் அறிமுகப்ப டுத்தப்பட்டுள்ள விதிகளின் படி, ஜனாதிபதியால் நியமிக்கப்படும் எல்லை நிர்ணய குழுவால் தேர்தல் தொகுதிகள் மற்றும் எல்லைகள் தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். அந்த அறிக்கை பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட பின்னரே தேர்தலை நடத்த முடியும்.

சட்ட விதிகளின் கீழ் எல்லை நிர்ணய பணிகள் நிறைவடையா மையே மாகாண சபைகள் தேர் தலை இதுவரை நடத்த முடியாமல் போகக் காரணம். எனவே, எல்லை நிர்ணயத்தைப் பூர்த்தி செய்து தேர்தலை நடத்துவதா? அல்லது 2017ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டு வந்து தேர்தலை நடத்துவதா? என்பது குறித்து தற்போது ஆராயப்பட்டு வருகின்றது. ஆய்வின் பின்னர் மாகாண சபைகள தேர்தலை நடத்துவது குறித்த இறுதி முடிவு எடுக்கப்படும். எவ்வாறாயினும், இந்த செயல்பாடுகளின் இறுதியில் தேர்தலை நடத்துவதற்காக 2026 வரவு - செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைவாகவே புதிய குழு ஒன்றை நியமிக்கும் யோசனை முன்வைக்கப்படவுள்ளது. எதிர்க்கட்சிகள் அனைத்தும் இதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். காணப்படும் குறைப்பாடுகள் - பிரச்னைகளுக்கு பேச்சுகள் மூலம் பொது இணக்கப்பாடு எட்டப்பட்டால் மாகாண சபைகள் தேர்தலை உடன் நடத்தலாம் - என்றார். (ஐ)

## ஜோன்ஸ்டனுக்கும்...

அவரின் இளைய மகன் ஜெரோம் கென்னத் பெர்னாண் டோவும் நேற்று நிதி குற்றப் புலனாய்வு பிரிவில் முன்னிலையாகினர். விசாரணைகளை தொடர்ந்து இருவரும் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து இருவரும் நேற்று திங்கட்கிழமை வத்தளை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். இதன்போது இருவரையும் எதிர்வரும் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இதேநேரம், இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் ஏற்கனவே ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் மூத்த மகன் ஜொஹான் பெர்னாண்டோ பொலிஸ் நிதி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கடந்த டிசெம்பர் 30ஆம் திகதி கைது செய்யப்பட்டு எதிர்வரும் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதே குற்றச்சாட்டுகளுக்காக ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை கைது செய்ய பொலிஸார் முன்னர் நடவடிக்கை எடுத்தனர். ஆனால், அவர் தலைமறைவானமையால் அவருக்கு வெளிநாடு செல்லத் தடை விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## றிஷாத்...

வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்டமை தொடர்பில் இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகள் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், இது தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக றிஷாத் பதியுதீன் இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் நேற்று முற்பட்டிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## எதிர்க்கட்சிகள்...

முயற்சிகளை நாங்கள் வரவேற்கிறோம். இரு கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும். இருப்பினும், நான் எந்தக் கட்சியிலும் உறுப்பினராக இல்லாததால் இது நடக்குமா என்று என்னால் கூற முடியாது", என்று நேற்றைய தினம் கொழும்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டபோது அவர் கூறினார்

இதேவேளை, தேசிய நலனுக்காக அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்றுபட வேண்டும் என்று நான் உறுதியாக நம்புகிறேன் - என்று பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜயசிறி ஒன்றிணைந்த எதிர்க்கட்சிக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இத்தகைய ஒத்துழைப்புதான் தேசத்திற்கு சிறந்த எதிர்காலத்தை உறுதி செய்வதற்கான ஒரே வழி என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

## ஹெரோயினுடன்...

யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பிரதி பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

கைதான இருவரும் 29, 32 வயதுடையவர்களாவர். சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கையை பொலிஸார் எடுத்துள்ளனர். (ஐ)

# மின்னஞ்சல் மூலம் ரூ.3 கோடி மோசடி; விசாரித்து அறிக்கையிட நீதிமன்று உத்தரவு

கொழும்பு, ஜன. 06

மின்னஞ்சல்களை அனுப்பி முதலீட்டு வாய்ப்புகளை வழங்குவதாகக் கூறி சுமார் 3 கோடி ரூபாயை மோசடி செய்தமை தொடர்பில் உடனடியாக விசாரணைகளை முன்னெடுத்து நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் அசங்க எஸ். போதரகம நேற்று உத்தரவிட்டார்.

குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் கணினி குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு நீதிவான் இந்த உத்தர வைப் பிறப்பித்துள்ளார்.

குற்றப் புலனாய்வு திணைக்களத் தின் கணினி குற்றப்புலனாய்வு பிரிவு அதிகாரிகள் நீதிமன்றில் இது குறித்து விடயங்களை முன்வைக்கையில், இணையம் ஊடாக பொதுமக்களுக்கு மின்னஞ்சல்களை அனுப்பி, அதன் மூலம் பல்வேறு திட்டங்களில் முதலீடு செய்வதன் ஊடாக அதிக இலாபம் ஈட்ட முடியும் என நம்பவைத்து இந்த பெரும் மோசடி முன்னெடுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டனர்.

மேலும், இது தொடர்பான விரிவான விசாரணைகளை முன்னெடுக்கப்படுகின்றன என்றும் மோசடியுடன் தொடர்புடைய சந்தேகநபர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை முடுக்கி விட்டுள்ளதாகவும் நீதிமன்றில் தெரிவித்தனர். (ஐ)

## தையிட்டி...

தி. நிரோஷ் உள்ளிட்ட ஐவருக்கு எதிரான வழக்கு நேற்றைய தினம் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கில் சந்தேகநபர்களாக பெயர் குறிப்பிடப்பட்ட வர்கள் நேற்றைய தினம் மன்றில் முற்பட்டனர். அவர்க ளின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்தி ரன், மூத்த சட்டத்தரணிகளான என்.சிறீகாந்தா, கு.குருபரன் உள்ளிட்ட சட்டத்தரணிகள் குழு முன்னிலை யாகி சமர்ப்பணங்களை முன்வைத்தனர்.

இதைத் தொடர்ந்து ஐவரையும் சொந்ப் பிணையில் செல்வதற்கு நீதிமன்று அனுமதியளித்தது. அத்துடன், வழக்கையும் எதிர்வரும் 26ஆம் திகதிக்கு அழைக்கவும் உத்தரவிட்டது.

வழக்கு தொடர்பில் ஊடகங்களிடம் பேசிய சட்டத்தரணி சுமந்திரன்,

"பலாலி பொலிஸார் நீதிமன்ற நடவடிக்கைகளை சட்டவிரோதமான முறையில் ஆரம்பித்துள்ளார்கள். இவ்வாறான நடவடிக்கைகளை ஆரம்பிக்க அவர்களுக்கு உரித்து கிடையாது. அமைதி வழி போராட்டங்களை முன்னெடுக்க அரசமைப்பில் தீர்க்கப்பட பல வழக்குகளிலும் உரித்து கொடுக்கப்பட்டுள்ளது. போராட்டக்காரர்களுக்கு பொலிஸாரே பாதுகாப்பு வழங்கி உதவ வேண்டும்.

"தையிட்டி விகாரை அமைந்துள்ள தனியார் காணிகளை விடுவிக்கக்கோரி கடந்த சில மாதங்களாகப் போராட்டங்கள் தீவிரமடைந்துள்ளன. நயினாதீவு விகாராதிபதி முன்வைத்த சமரசத் திட்டத்தைத் தொடர்ந்து, இந்த விவகாரம் இப்போது சட்ட ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் முக்கிய கட்டத்தை எட்டியுள்ளது" - என்றார்.

சட்டத்தரணி சிறீகாந்தா கருத்துக் கூறுகையில்,

"புதிய அரசாங்கத்தின் காலத்தில்கூட பொலிஸாரின் மனோநிலை - சிந்தனைகளில் மாற்றம் ஏற்படாது தமிழ் மக்களுக்கு எதிராக சட்டத்தை கேலி கூத்தாக்கும் பல வழக்குகளை தொடர்ந்து கொண்டேதான் இருக்கின்றனர்", என்றார். (ஐ)

## வட, கிழக்கில்...

நேற்றைய தினம் அவர் விடுத்த காலநிலை அவதானிப்பு அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

தென்மேற்கு வங்காள விரிகுடாவில் இலங்கைக்கு தென் கிழக்கு பகுதியில் தற்போது காணப்படும் தாழ்வு நிலை வலுப்பெறுகிறது. இன்றைய நிலையில் இது, இலங்கையின் கிழக்கு கரையூடாக வடக்கு, வடமேற்கு திசை நோக்கி நகர்ந்து வடக்கு மாகாணத்தை மிக அண்மித்து தமிழ்நாட்டை அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் தாழமுக்கம் காரணமாக வடக்கு, கிழக்கு, ஊவா, வட மத்திய, மத்திய, தென் மாகாணங்கள் கன மழையைப் பெறும் வாய்ப்புள்ளது.

இந்த தாழமுக்கத்தால் எதிர்வரும் 11ஆம் திகதி வரை கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளும் பரவலாக கனமழையைப் பெறும் வாய்ப்புள்ளது. அத்துடன், இந்தத் தாழமுக்கம் கிழக்கு பகுதியை அண்மித்தே (நிலப்பகுதியோடு இணைந்ததாக) வடக்கு நோக்கி நகரும் என்பதனால் வேகமான காற்றோடு இணைந்த கனமழையும் இடி, மின்னல் தாக்கமும் இடம்பெறும்.

இந்தத் தாழமுக்கம் கிழக்கு கரையூடாக வடக்கு நோக்கி நகர்ந்து வடக்கு கரையூடாக தமிழ்நாட்டை அடையும் என்பதனால். இதனால், வடக்கு மாகாணம் இன்று மிதமான மழையையும் நாளை முதல் பரவலாக மிகக் கனமழையயும் பெறும். நாளை முதல் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்கள் அதிக மழையைப் பெற வாய்ப்புள்ளது.

இதேநேரம், ஊவா மாகாணம், வடமத்திய மாகாணத்தின் அநுராதபுரம், பொலநறுவை மாவட்டங்கள் கனமழையைப் பெறும்.

இந்தத் தாழமுக்கம் காரணமாக மழை தொடர்ச்சியாக கிடைக்கும் என்பதனாலும், சில நாட்களில் மிகக் கனமழை கிடைக்கும் என்பதனாலும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, பதுளை, மொனராகலை, அநுராதபுரம், பொலநறுவை, புத்தளம், குருநாகல் மாவட்டங்களில் பல பகுதிகளிலும் வெள்ள அபாயம் ஏற்பட வாய்ப்பு உண்டு. இதேபோன்று, அம்பாந்தோட்டை மாவட்டத்தின் சில பகுதிகளிலும் வெள்ளம் ஏற்படலாம்.

வடக்கு, கிழக்கு, வட மத்திய மற்றும் மத்திய மாகாணங்களின் குளங்களின் நீரை தற்போதே சற்று குறைந்த மட்டத்தில் பேணுவது சிறந்தது. இந்த நாட்களில் மத்திய, ஊவா மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் தொடர்ச்சியாக கனமழை கிடைக்கும் வாய்ப்புள்ளதனால் அதனோடு இணைந்த நிலச்சரிவு அனர்த்தங்களும் ஏற்படும் வாய்ப்பு உள்ளது.

இன்று முதல் நாட்டின் வடக்கு, கிழக்கு, தென் கிழக்கு மற்றும் தெற்கு கடற்பகுதிகள் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்பதனால் மீனவர்கள் கடலுக்கு செல்வதை தவிர்க்க வேண்டும்.

இந்த கனமழை, வெள்ளம் மற்றும் நிலச்சரிவால் பாதிக்கப்படும் வாய்ப்புள்ள மக்களை தாயார்ப்படுத்தும் திணைக்களங்களின் அதிகாரிகள் இது தொடர்பாக மக்களை விழிப்பூட்டுவது அவசியம் - இவை குறித்து அவதானமாக இருப்பது மிகமிக அவசியம் - என்றுள்ளது. (ஐ)

## நெடுந்தீவில்...

போதனா மருத்துவமனையில் சேர்ப்பிக்க வேண்டியேற்பட்டது.

கடல் கொந்தளிப்பால் படகு மூலம் அவரை மருத்துவமனைக்கு கொண்டு செல்வதில் சிக்கல் ஏற்பட்டது. எனவே, இது தொடர்பில் வடக்கு ஆளுநர், யாழ். மாவட்ட அரச அதிபர் ஆகியோருக்கு தகவல் அளிக்கப்பட்டது.

இதையடுத்து, பாதுகாப்பு அமைச்சின் அனுமதியை பெற்று விமான படையின் ஹெலிகொப்டர் மூலம் அந்தப் பெண் சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டு யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (ஐ)

## சகல...

ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. மாகாண சபைகளின் மொத்த வருமானத்தில் 83 சதவீதம் அரசாங்கத்தின் நேரடி பங்களிப்பாகும்.

இதன் மூலம் அனைத்து மாகாண சபைகளும் தமது நிர்வாக செலவுகளுக்காக திறைசேரியையே முழுமையாகச் சார்ந்துள்ளன. இவ்வாறு அரசாங்கம் வழங்கும் நிதியை செலவிடுவதில் மாகாண சபைகள் நிதி ஒழுக்கமின்மையை கடைப்பிடிக்கின்றன என்று கணக்காய்வு அறிக்கை குற்றஞ்சுமத்தியுள்ளது.

அரச சுற்றுநிருபங்களை மீறி, மாகாண ஆளுநர்களின் விசேட அனுமதியை பெற்று அதிகாரிகள் தமக்கான எரிபொருள் கொடுப்பனவுகளை அதிகரித்துள்ளனர். நியாயமற்ற மற்றும் விதிமுறைகளுக்கு புறம்பான பல்வேறு மேலதிக கொடுப்பனவுகளை அதிகாரிகள் பெற்றுள்ளனர்.

நிறுவன கோவையின் விதிகளை பின்பற்றாமல், தன்னிச்சையான முறையில் வீட்டு வாடகை கொடுப்பனவுகளையும் அதிகாரிகள் பெற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. (ஐ)

## எரிபொருள்...

இதேநேரம், இந்த எரிபொருள் விலை திருத்தத்துக்கு அமைவாக லங்கா ஐ. ஓ. சி. நிறுவனமும் தனது எரிபொருட்களின் விலைகளை திருத்தியுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# நாட்டின் தற்போதைய நிலைமை மிக பயங்கரமாக தோன்றுகிறது!

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த தெரிவிப்பு**

கொழும்பு, ஜன. 06

**நாட்டின் தற்போதைய நிலைமை மிகவும் பயங்கரமாக தோன்றுகிறது என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"அரசாங்கம் தற்போது கல்வித் துறையையும் சீர்குலைத்துள்ளது. நாட்டின் அனைத்துத் துறைகளும் வீழ்ச்சியடைந்து வருகிறது. அரசாங்க தரப்பினர் கடினமாக உழைப்பதாக கூறிக்கொண்டாலும் நடைமுறையில் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் அதிகரித்து வருகின்றன."- என்றார்.

அரசாங்கத்தின் மின்சார கட்டண அதிகரிப்பு திட்டம் குறித்து வினவியபோது, அது பொதுமக்களால் தாங்கிக்கொள்ள முடியாத ஒரு சுமை என அவர் தெரிவித்தார்.

மேலும், ஜனாதிபதி பதவி விலக வேண்டும் எனப் பல தரப்பினரால் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் குறித்து வினவியபோது, அது பற்றித் தான் எந்தவித கருத்தையும் கூற விரும்பவில்லை எனத் தெரிவித்து பதிலை




தவிர்த்துக் கொண்டார். இதேவேளை, நாட்டின் தேசிய சொத்துக்களை விற்பனை செய்யும் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு மக்கள் மத்தியில் பலத்த எதிர்ப்பு நிலவுவதாகவும் இது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்றும் மகிந்த வலியுறுத்தினார். (எ)

## மாணவர்க்கு இணையம் குறித்து வழிகாட்ட டிஜிற்றல் செயலணி!

**பிரதமர் ஹரிணி அமரசூரிய அறிவிப்பு**

கொழும்பு, ஜன. 06

கல்வி அமைச்சால் அறிமுகப்படுத்தப்பட்ட சில பாடத் திட்டங்கள் தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சைகளுக்கு மத்தியில், மாணவர்களுக்கான பாதுகாப்பான இணைய வழி வழிகாட்டல்களைத் தீர்மானிக்க "டிஜிற்றல் செயலணி" ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை குறிப்பிட்டார்.

தொழில்நுட்பத்திலிருந்து குழந்தைகளை முழுமையாகப் பிரித்துவிட முடியாது என்பதால், அவர்களுக்குப் பொருத்தமான இணைய செயல்பாடுகள் அறிமுகப்படுத்தப்படும்.

இதற்கான வழிகாட்டல்கள் இந்த ஆண்டின் நடுப்பகுதியில் வெளியிடப்படும். அமைச்சால் அங்கீகரிக்கப்பட்ட இணையதளங்கள் மற்றும் இணைப்புகளை மட்டுமே மாணவர்கள் அணுகும் வகையில் இது அமையும். அத்துடன் புதிய சீர்திருத்தங்களின் கீழ், சுயக்கற்றல் தொகுதிகள் ஊக்குவிக்கப்படும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

## இ. பி. எவ்.வை முறையாக செலுத்தாத நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை

கொழும்பு, ஜன. 06

ஊழியர் சேமலாப நிதியை (ஈ. பி. எவ்.) முறையாக செலுத்தாத நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளதாகத் தொழில் அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்காகத் தொழிலாளர் துறையின் இணையவழி முறைப்பாட்டு மேலாண்மை அமைப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என்று தொழில் அமைச்சின் செயலாளர் எஸ். எம். பியதிஸ்ஸ குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி ஊழியர்கள் தற்போது தொழிலாளர் துறையின் அதிகாரபூர்வ இணையதளம் வாயிலாக நேரடியாக முறைப்பாடுகளைப் பதிவு செய்யலாம்.

இதற்கமைய தொடர்பு விபரங்களை வழங்கும் நபர்களுக்கு, சம்பந்தப்பட்ட நிறுவனத்தின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து உடனுக்குடன் அறிவிக்கப்படும் என்று ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தநிலையில் தவறிழைக்கும் நிறுவனங்களுக்கு முதலில் முறையான அறிவித்தல் அனுப்பப்படும். பின்னர் நிறுவன பிரதிநிதிகளுடன் நேரடியாகப் பேச்சு நடத்தி, நிலுவைத் தொகையை மீட்க அதிகாரிகள் முயற்சிப்பார்கள். இதற்கு பின்னரும் நிறுவனங்கள் நிதி செலுத்தத் தவறினால், சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, அபராதத்துடன்கூடிய நிலுவைத் தொகை வசூலிக்கப்படும் - என்றும் அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

2015ஆம் ஆண்டு முதல் தற்போது வரை 22 ஆயிரத்து 450 நிறுவனங்கள் ஊழியர் சேமலாப நிதியைச் செலுத்துவதில் தவறிழைத்துள்ளன என்று நிதி அமைச்சு பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தது. இவற்றின் மொத்த நிலுவைத் தொகை சுமார் 3 ஆயிரத்து 498 கோடி ரூபாய்க்கும் அதிகம் என மதிப்பிடப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

### டித்வா சூறாவளி பாதிப்பு:

## நன்கொடையாக இதுவரை ரூ. 8,500 கோடி கிடைத்தது!

கொழும்பு, ஜன. 06

டித்வா புயலால் ஏற்பட்ட பாதிப்புகளை அடுத்து வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரிடமிருந்து இதுவரை நன்கொடையாக சுமார் 8 ஆயிரத்து 500 கோடி ரூபாய் கிடைத்துள்ளது- இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

### டித்வா சூறாவளி பாதிப்பு:

## பாதிக்கப்பட்ட நிறுவனங்களுக்கான இரண்டாம் கட்ட பதிவுகள் ஆரம்பம்

கொழும்பு, ஜன. 06

டித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்ட ஏற்றுமதி மற்றும் உற்பத்தித் துறைகள் உள்ளிட்ட வணிக நிறுவனங்களைப் பதிவு செய்யும் இரண்டாம் கட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தொழில் மற்றும் தொழில் முனைவோர் அபிவிருத்தி அமைச்சு அறிவித்துள்ளது.

உற்பத்தி மற்றும் சிறு அளவிலான தொழில்துறையினரின் கோரிக்கைக்கு இணங்க இந்த மறுபதிவு செயல்முறை தொடங்கப்பட்டுள்ளது.

இந்தப் பதிவு நடவடிக்கைகள் ஜனவரி 16ஆம் திகதி வரை தொடரும் என அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அமைச்சில் இதுவரை பதிவு செய்யப்படாத சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழிற்சாலைகளுக்கு 2 இலட்சம் ரூபாய் பேரிடர் நிவாரணக் கொடுப்பனவாக வழங்கப்படவுள்ளது.

இந்த நிதி விநியோக நடவடிக்கைகள் அந்தந்த மாவட்டங்களின் பிரதேச செயலகங்கள் ஊடாக ஒருங்கிணைக்கப்படும்.

அமைச்சின் தரவுகளின் அடிப்படையில், 29 ஆயிரத்து 649 ஏற்றுமதி, உற்பத்தி மற்றும் சிறு மற்றும் நடுத்தர வணிகங்கள் (அறிமுகப்படுத்தப்பட்ட அவசர தொலைபேசி இலக்கம் ஊடாக பதிவு செய்யப்பட்டுள்ளன).

9 ஆயிரத்து 628 ஏற்றுமதி மற்றும் உற்பத்தி தொழிற்சாலைகள் (நேரடியாக அமைச்சின் கண்காணிப்பின் கீழ் உள்ளவை) என்பன பதிவு செய்யப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட வணிகங்களுக்குத் தேவையான மேலதிக ஆதரவை வழங்கவும், இந்தச் செயல்முறைகளை எளிதாக்கவும் அமைச்சால் ஆயிரத்து 500 அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## பௌத்த மதத்துக்கே முன்னுரிமை; திஸ்ஸ விகாரையை அகற்றமுடியாது!

**பொதுஜன பெரமுன கட்சி**

கொழும்பு, ஜன. 06

யாழ்ப்பாணம் - தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரையை அகற்ற ஒருபோதும் இடமளியோம் - இவ்வாறு சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தரான ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அவர் தனது கட்சி பணிமனையில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், "இந்த நாட்டில் பௌத்த மதத்துக்கே முன்னுரிமை என்பது தமிழ் மக்களுக்கும் தமிழ் அரசியல்வாதிகளுக்கும் தெரியாதா? தையிட்டி திஸ்ஸ விகாரையில் எவரும் கைவைக்க முடியாது. அதை அகற்ற ஒருபோதும் இடமளியோம். திஸ்ஸ விகாரையைச் சுற்றியுள்ள காணிகள் விகாரைக்குச் சொந்தமானவை. அந்தக் காணிகளை அரசு விடுவிக்கக்கூடாது.

இதேவேளை, தையிட்டி விகாரை விடயம் தொடர்பில் யாழ்ப்பாணத்தில் உள்ள விகாராதிபதிகள் ஒருமித்த நிலைப்பாட்டுக்கு வர வேண்டும். அவர்கள் தனிப்பட்ட ரீதியில் கருத்துகளை வெளியிடுவதைத் தவிர்க்க வேண்டும்." - என்றார். (ஐ)

## தேங்காய் எண்ணெய் விலை அதிகரித்தது!

கொழும்பு, ஜன. 06

சந்தையில் கடந்த இரண்டு வாரங்களில் தேங்காய் எண்ணெயயின் விலை சுமார் 100 ரூபாயால் அதிகரித்துள்ளதாக தேசிய நுகர்வோர் முன்னணி தெரிவித்துள்ளது.

இதேநேரம், மரக்கறி எண்ணெயின் விலையும் அதிகரித்துள்ளதாக அதன் தலைவர் அசேல சம்பத் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

## இந்தியாவுடன் திருட்டு ஒப்பந்தம்: இலங்கைக்கு பாரிய ஆபத்தாகும்

**முன்னாள் அமைச்சர் ராஜித எச்சரிக்கை**

கொழும்பு, ஜன. 06

நாட்டில் இன்று பெரும் மருந்து தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் இந்தியாவுடன் செய்து கொண்டுள்ள சுகாதாரம் தொடர்பான திருட்டு ஒப்பந்தம் நாட்டுக்கு பேராபத்தாகும் என்று முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் பணிமனையில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாட்டில் 400இற்கும் அதிக மருந்துப்பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில், இன்னும் சில நாட்களில் மயக்க மருந்துகளுக்கும் மருத்துவமனைகளில் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதேநேரம், சுகாதாரம் தொடர்பில் அரசாங்கம் இந்தியாவுடன் செய்து கொண்டுள்ள திருட்டு ஒப்பந்தம் மிகவும் பயங்கரமானதாகும். இந்த ஒப்பந்தத்தை நாங்கள் கண்டுபிடித்து வெளிப்படுத்தி இருக்கிறோம். இந்தியாவின் மருந்து பாமகோபியாவை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. பிரித்தானிய, ஐரோப்பிய மற்றும் அமெரிக்க பாமகோபியாவையே நாங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறோம்.

ஏனெனில், இந்த நாடுகளில் தரம் குறைந்த மருந்து என ஒன்று இல்லை. அதனால், அச்சமின்றி எங்களுக்கு அந்த நாடுகளின் பாமகோபியாக்களில் இருந்து இறக்குமதி செய்ய முடியும். ஆனால், இந்திய பாமகோபியாவுடன் அவ்வாறு செய்ய முடியாது. இந்திய மருந்துகளில் நல்ல மருந்துகளும் இருக்கின்றன. தரம் குறைந்த மருந்துகளும் இருக்கின்றன. அதனாலே இந்திய பாமகோபியாவை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை."- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.01.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.